1995 ஏப்ரல் 19]

சிறு தொழில் முனைவோர்களுக்கு எல்லாவிதமான ஆக்கத்தையும், ஊக்கத்தையும் கொடுத்துக் கொண்டிருக்கிற அரசு, அதன் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை இந்த அரசு கனிவோடு பரிசீலிக்கும். 25 பேர்கள் தொழில் முனைவோர்கள் முன்வந்தால் உடனடியாக அங்கே தொழிற்பேட்டை ஆரம்பிக்க தக்க நடவடிக்கையை அரசு எடுக்கும். காலம் எவ்வளவு ஆகும் என்று கேட்டார்கள். எவ்வளவு விரைவாக அதைச் செய்து கொடுக்க முடியுமோ அவ்வளவு விரைவாக அதைச் செய்து கொடுக்க அரசு முனையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 350, திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

350—

கல்வராயன் மலைப்பகுதியில் காகிதத் தொழிற்சாலை அமைத்தல்.

***26404—** *திரு. சி. இராமசுவாமி:*

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சங்கராபுரம் தொகுதியில் கல்வராயன் மலைப்பகுதியில் காகிதத் தொழிற்சாலை அமைக்கும் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சங்கராபுரம் தொகுதி, கல்வராயன் மலைப்பகுதியில் காகித தொழிற்சாலை அமைக்கத் தேவையான மூலப் பொருட்கள், தண்ணீர் வசதி ஆகியவை இல்லை. எனவே, காகித ஆலை அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன் மலைப்பகுதி சங்கராபுரம் தொகுதியில் வருகிறது. மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த சங்கராபுரம் தாலுக்காவை இண்டஸ்ட்ரியலி பேக்வர்ட் தாலுக்காவாக அறிவித்துள்ளார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கு மூலப் பொருட்கள் இல்லை என்று சொன்னார்கள். காகிதத் தொழிற்சாலை துவங்கத் தேவையான மூங்கில், பகாஸ், (கரும்புச் சக்கைகள்) ஆகியவை கிடைக்கின்றன. இங்கு மூன்று சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்து, சங்கராபுரம் தொகுதியில் காகித ஆலை அமைக்க முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காகித ஆலை அமைக்க வேண்டுமென்று சொன்னால் கீழ்க்கண்ட வசதிகள் இருக்க வேண்டும். (1) காகித ஆலை நிறுவும் இடத்தில் நாள் ஒன்றுக்கு 5 மில்லியன் காலன் தண்ணீர் இடைவிடாது கிடைக்க வேண்டும். (2) ஆண்டொன்றுக்கு எண்பதாயிரம் டன் மரம், மூங்கில், காகித கூழ்கள் அல்லது ஒரு லட்சத்து எண்பதாயிரம் டன் கரும்புச் சக்கைகள் ஆகியவை கிடைக்கிறதா என்பதை உறுதி செய்ய வேண்டும். மூலப்பொருட்களை, இரசாயனப் பொருட்களை எளிதில் எடுத்துச் செல்ல வசதியாக நெடுஞ்சாலை இருக்க வேண்டும். ஆலைக்குத் தேவையான ஏராளமான நிலக்கரியை எடுத்துச் செல்ல வசதியாக இருப்புப்பாதை வசதி இருக்க வேண்டும். ஆலையிலிருந்து வெளியேறும் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கும் சுத்திகரிப்பு செய்வதற்கும், சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதுகாக்கவும் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட வேண்டும். சொந்த மின் உற்பத்தி மூலம் அல்லது தமிழ்நாடு மின்வாரிய மின்சக்தி பெற உறுதி செய்ய வேண்டும். ஒரு காகித ஆலை இலாபகரமாக செயல்பட குறைந்தபட்சம் காகித உற்பத்தி திறன் அளவு நாள் ஒன்றுக்கு 100 டன் இருக்க வேண்டும். கல்வராயன் மலைப் பகுதியில் ஒரு காகித ஆலைக்குத் தேவையான தண்ணீர் வசதி, மூலப்பொருட்கள் வசதி. போக்குவரத்து வசதி ஆகியவை இல்லை. எனவே காகித ஆலை நிறுவுவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன் மலைப்பகுதியில் தண்ணீர்ப் பஞ்சம் கிடையாது. மேலும் போதுமான மூலப்பொருட்கள், மூங்கில், பகாஸ் அதிகமாக இருக்கின்றன. மூன்று சர்க்கரைத் தொழிற்சாலை இருக்கின்றன. மூங்கில்துறைப்பட்டு சர்க்கரை ஆலை, செங்கல்ராயன் சர்க்கரை ஆலை, கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலை ஆகியவை அந்த மூன்று சர்க்கரை ஆலைகள். அங்கு பகாஸ் அதிகமாக கிடைக்கின்றன. மேற்படி சர்க்கரை ஆலைகளுக்கு தேவையான மின்சாரத்தை அந்த தொழிற்சாலைகளே தயார் செய்துகொள்கின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு அல்லது அடுத்த ஆண்டிலாவது இந்த ஆலையை அமைக்க முன் வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் குறிப்பிடுகிற சர்க்கரை ஆலையிலிருந்து வெளியேறுகிற பகாஸ் தற்போது புகளூரிலுள்ள தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனத்திற்குத் தேவைப்படுகிற காரணத்தினால் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்வதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 351, திரு. இரா. அப்பு நடேசன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.